# வடக்கு மாகாண கல்வி அமைச்சின் ஆலோசனைக் குழுக் கூட்டம் 2015

## 2015/05

**இடம்** : வடக்கு மாகாண கல்வி அமைச்சின் மாநாட்டு மண்டபம்

**காலம்** :- 18.10.2015 (புதன்கிழமை) காலை 10.30 மணி

**சமுகமளித்த கல்வி ஆலோசனைக் குழுவினர் :-**

- கௌரவ கல்வி அமைச்சர் திரு.த.குருகுலராசா (தலைவர்)
- கௌரவ எதிர்க் கட்சித் தலைவர் திரு.த.சி.தவராசா.
- கௌரவ பிரதி அவைத் தலைவர் திரும.அன்ரனி ஜெயநாதன்.
- திரு.இ.ஆனல்ட் - கௌரவ வடக்கு மாகாண சபை உறுப்பினர்
- திரு.பா.கஜதீபன் - கௌரவ வடக்கு மாகாண சபை உறுப்பினர்
-

**சமுகமளித்த ஏனையோர்**

- ஜனாப்.அஸ்மின் - கௌரவ வடக்கு மாகாண சபை உறுப்பினர்
- திரு.கே.சிவநேசன் - கௌரவ வடக்கு மாகாண சபை உறுப்பினர்
- திரு.அ.பரஞ்சோதி – கௌரவ வடக்கு மாகாண சபை உறுப்பினர்
- திரு.கே.என்.கனகரத்தினம் - கௌரவ வடக்கு மாகாணசபை உறுப்பினர்.
- திரு.எம்.பி.நடராஜ் - கௌரவ வடக்கு மாகாணசபை உறுப்பினர்.
- திரு.ரி.லிங்கநாதன் - கௌரவ வடக்கு மாகாணசபை உறுப்பினர்.
- திரு.க.தருமலிங்கம் - கௌரவ வடக்கு மாகாணசபை உறுப்பினர்.
- திரு.க.வ.கமலேஸ்வரன்- கௌரவ வடக்கு மாகாணசபை உறுப்பினர்.
- கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன் - கௌரவ வடக்கு மாகாணசபை உறுப்பினர்.
- கௌரவ திரு.வே.சிவயோகன் - வடக்கு மாகாணசபை உறுப்பினர்.
- கௌரவ திரு.ச.சுகிர்தன் - வடக்கு மாகாணசபை உறுப்பினர்.
- கௌரவ திரு.எம்.தியாகராஜா - வடக்கு மாகாணசபை உறுப்பினர்.
- திரு.இ.இரவீந்திரன் - செயலாளர், கல்வி அமைச்சு, வடக்கு மாகாணம்.
- திரு.எஸ்.உதயகுமார் - மாகாணக் கல்விப் பணிப்பாளர், வடக்கு மாகாணம்.
- திரு.ராஜா ரணசிங்க – பணிப்பாளர், விளையாட்டுத் திணைக்களம்.
- எந்திரி.தே.சுரேஸ்குமார்,பாடசாலை வேலைகள் பணிப்பாளர், கல்வி அமைச்சு,வ.மா.
- எந்திரி.எஸ்.விகிர்தன், பாடசாலை வேலைகள் பொறியியலாளர், கல்வி அமைச்சு,வ.மா.
- திரு.ஆ.க.சண்முகநாதன் - கல்வி அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர்.
- திரு.மா.தேவேந்திரன் - பிரதிக் கல்விப் பணிப்பாளர்(நிர்வாகம்), மா.க.அமைச்சு
- திரு.கே.முகுந்தன் - விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர், விளையாட்டுத் திணைக்களம்.
- திரு.ம.பிறின்ஸ் லம்பேர்ட் - விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர், விளையாட்டுத் திணைக்களம்
- திருமதி.செ.சு.செபஸ்ரியன் - உதவிச்செயலாளர், கல்வி அமைச்சு, வட மாகாணம்.
- திரு.தி.ஞானசுந்தரன் - பிரதிக் கல்விப் பணிப்பாளர்(திட்டமிடல்), மா.க.அமைச்சு
- திரு.ஆர்.ஜெனால்ட் அன்ரனி - பிரதிக் கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்), மா.க.தி
- திருமதி.எஸ்.வனஜா – பிரதிப் பணிப்பாளர்,கலாசார திணைக்களம், வட மாகாணம்.
- திரு.எஸ்.புஸ்பலிங்கம் - பிரதிப் பணிப்பாளர்(கல்வி), மா.க.அமைச்சு
- திரு.மு.இராதாகிருஸ்ணன் - மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர், மா.க.தி

- செல்வி மே.சோபிதா – விளையாட்டுத் திணைக்களம்.
- திரு.எ.கிரிதரன் – கணக்காளர், மா.க.அமைச்சு

கௌரவ கல்வி அமைச்சர் அவர்கள் ஐந்தாவது கல்வி ஆலோசனைக் குழுக் கூட்டத்திற்கு சமுகமளித்தவர்களை வரவேற்று கூட்டத்தை ஆரம்பித்தார்.

➢ **விளையாட்டு உத்தியோகத்தர் ஆட்சேர்ப்பு தொடர்பானது.**

மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் பரீட்சை நடாத்தப்பட்டு பதவி உயர்விற்கான நேர்முகத்தேர்வு முடிவுற்றுள்ளது. மிக விரைவில் பதவி உயர்வுகள் வழங்கப்படும்.

➢ **யா/ஒஸ்மானியா கல்லூரி அதிபர் நியமனம் தொடர்பானது.**

புதிய அதிபர் கடமையேற்று பாடசாலை செயற்பாடுகள் தொடர்ந்து நடைபெறுவதாக செயலாளர் தெரிவித்தார்.

➢ **அதிபர் சேவை இடமாற்றம் தொடர்பானது.**

அதிபர் இடமாற்றங்கள் நடைபெற்று முடிந்து விட்டதாகவும் 7 வருடங்களிற்கு மேற்பட்டவர்களிற்கான இடமாற்றங்கள் டிசம்பர் மாதம் 10 ஆம் திகதியளவில் மேற்கொள்ளப்பட வேண்டும் என கௌரவ அமைச்சர் கேட்டுக் கொண்டார். நவம்பர் மாத இறுதியில் தரம் 01 இற்கு 30 அதிபர்கள் பதவியுயர்வு பெற இருப்பதனால் அவர்களுடைய இடமாற்றங்களும் கருத்தில் கொள்ளப்பட்டு டிசம்பர் மாதம் 15 ஆம் திகதியளவில் இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படும் என செயலாளர் தெரிவித்தார்.

கிளிநொச்சி வலயத்தில் கடமையாற்றும் திரு புண்ணியமூர்த்தி அவர்களிற்கு உரிய பாடசாலை வழங்கப்படவில்லை என்ற கௌரவ மாகாண சபை உறுப்பினர் திரு.ப.அரியரத்தினம் அவர்கள் முன்னைய கூட்டத்தில் விடுத்த கோரிக்கை கருத்தில்கொள்ளப்பட்டு டிசம்பர் மாத இடமாற்றத்தில் உரிய பாடசாலை வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

➢ **தொண்டர் ஆசிரியர் நியமனம் தொடர்பானது.**

தொண்டராசிரியர்கள் தொடர்பாக கௌரவ ஜானாதிபதி அவர்களை சந்தித்தபோது இவ்விடயம் தொடர்பாக கலந்துரையாடியதாகவும் கௌரவ ஜனாதிபதி அவர்கள் இது தொடர்பாக கவனமெடுப்பதாகவும் கௌரவ அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

செயலாளர் அவர்கள் தான் இவ்விடயம் சம்பந்தமாக கலந்துரையாடியதாகவும் அவர்கள் ஆசிரியர்களின் சுயவிபரத்தையும் பாடசாலைகளில் உள்ள வெற்றிடங்கள் பற்றிய தகவல்களையும் கோரியுள்ளனர். அத்துடன் 35 வயதிற்கு மேற்பட்டோருக்கு நியமனங்கள் வழங்க முடியாது எனவும் தெரிவித்துள்ளனர் என தெரிவித்ததுடன் புதிய பட்டியல் தயாரிப்பது பற்றியும் கலந்துரையாடினார். மீள நேர்முகத் தேர்வு நடாத்துவது சாத்தியமற்றது என்ற

காரணத்தினால் வலயங்களில் தொடர்பு கொண்டு தொண்டராசிரியர்களின் விபரங்களை பெற்று மீள் பரிசீலனை செய்து புதிய பட்டியலை தயாரித்து மீள அனுப்புவதற்கு முடிவு செய்யப்பட்டது.

- **வ/விபுலானந்த கல்லூரி அதிபர் திரு.கந்தையா தனபாலசிங்கம் SLPS – I அவர்களது ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பானது**

  டிசம்பர் முதலாம் திகதி வழக்கினை மீள பெற்றுக் கொள்வதற்கு அதிபர் திரு.க.தனபாலசிங்கம் அவர்கள் உடன்பட்டுள்ளதால் அக் காலப்பகுதிக்கு பின்னர் புதிய அதிபர் நியமனத்திற்கான தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அத்துடன் அலுவலக ரீதியான விசாரணை பற்றி வினவப்பட்டபோது 20 ஆம் திகதி இறுதி விசாரணை நடைபெற இருப்பதாக செயலாளர் அவர்கள் தெரிவித்தார்.

- **யா/கதீஜா பெண்கள் கல்லூரியை மீள ஆரம்பித்தல் தொடர்பானது.**

  யா/கதீஜா பெண்கள் கல்லூரி மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கௌரவ மாகாண சபை உறுப்பினர் ஜனாப்.அ.அஸ்மின் அவர்கள் பாடசாலை காணிக்குள் குடியிருப்போரை வெளியேற்றுமாறு கேட்டுக்கொண்டார். இவ் விடயம் தொடர்பாக மீள்குடியமர்வு அமைச்சிற்கு அறிவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

- சமளங்குளம் – ஒட்டுசுட்டான் , விஸ்வமடு பகுதி மாணவர்களிற்கு பாடசாலை செல்வதற்கு பேருந்து வசதியின்மை தொடர்பில் கௌரவ மாகாணசபை உறுப்பினர். திரு.கே.சிவநேசன் அவர்களின் கோரிக்கைக்கமைய அரசாங்க அதிபருக்கு கடிதம் மூலம் அறிவித்ததாகவும் அரச அதிபர் சம்பந்தப்பட்டோருடன் கலந்துரையாடி முடிவு எட்டுவதற்கு தெரிவித்திருப்பதாக செயலாளர் தெரிவித்தார்.
- நெடுந்தீவு பாடசாலைகளில் விஞ்ஞான ஆசிரியர் பற்றாக்குறை பாரிய குறைபாடாக உள்ளது என்ற கௌரவ மாகாணசபை உறுப்பினர் திரு.கே.என்.கனகரத்தினம் அவர்களின் கோரிக்கைக்கமைய ஓர் ஆசிரியர் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் சனவரி மாதம் மேலும் ஆசிரியர்கள் நியமிக்கப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டது.
- எழுவைதீவில் நடைபெற்ற நடமாடும் சேவையில் முன்வைக்கப்பட்ட கோரிக்கையான எழுவைதீவு, அனலைதீவு பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை பாரிய குறைபாடு தொடர்பில் கூடிய அக்கறை செலுத்த வேண்டும் என கௌரவ மாகாணசபை உறுப்பினர் திரு.கே.என்.கனகரத்தினம் அவர்கள் கேட்டுக் கொண்டார். இவ்விடயம் தொடர்பில் கல்வியியற் கல்லூரி பாடநெறி பூர்த்தியடைந்ததும் நியமனம் மேற்கொள்ளப்படும் என உதவிச் செயலாளர் தெரிவித்தார்.

- **பாடசாலை தரமுயர்த்துதல்**

1. வ/நெளுக்குளம் கலைமகள் வித்தியாலயம் , விஞ்ஞானப் பிரிவு ஆரம்பித்தல் – உரிய ஆவணங்கள் சமர்பிக்கப்படாமையினால் தொடர் நடவடிக்கை மேற்கொள்ள முடியாதுள்ளது என மாகாணக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.
2. வ/கூமாங்குளம் சித்தி விநாயகர் வித்தியாலயம் , க.பொ.த. (கலை, வர்த்தக) பிரிவு ஆரம்பித்தல் தொடர்பில் கருத்து தெரிவித்த மாகாணக் கல்விப் பணிப்பாளர் தரமுயர்த்தல் தொடர்பில் நாம் கூடிய கவனம் செலுத்த வேண்டும் எனவும் பாடசாலைகளை தரமுயர்த்துவதற்கு போதியளவு மாணவர் தொகை , அயல் பாடசாலைகளில் ஏற்படும் தாக்கம், அயல் பாடசாலைகளின் தரம் , தூரம் , ஆசிரியர் பற்றாக்குறை என்பன கவனத்தில் கொள்ளப்படவேண்டும் எனவும் தெரிவித்தார். இதனடிப்படையில் மேற்குறித்த பாடசாலை தரமுயர்த்தல் நிராகரிகரிக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.
   இவ் விடயத்தில் கலை , வர்த்தகம் போன்ற பாடங்களை மட்டும் ஆரம்பிக்க அனுமதியளிக்க வேண்டும் என கௌரவ மாகாணசபை உறுப்பினர் திரு.எம்.பி.நடராஜ் அவர்கள் கேட்டுக்கொண்டார்.
   கலை , வர்த்தக பிரிவுகளை தொடங்குவதற்கு அனுமதியளிக்கப்பட ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.
3. மன்/ஈச்சளவக்கை அ.த.க.பாடசாலை தரம் 11 ஆரம்பிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது ஆனால் அனுமதிக் கடிதம் கிடைக்கப்பெறவில்லையென பாடசாலையினால் அறியத்தரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அனுமதிக் கடிதம் அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
4. கிளி/செல்வநகர் தமிழ் வித்தியாலயம் 6இலிருந்து 11 வரை ஆரம்பிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது ஆனால் அனுமதிக் கடிதம் கிடைக்கப்பெறவில்லையென பாடசாலையினால் அறியத்தரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அனுமதிக் கடிதம் அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
5. யா/கச்சாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை , க.பொ.த. (உயர்தரம்) 2016இல் ஆரம்பித்தல் தொடர்பில் ஆராயப்பட்டதாகவும் அருகில் யா/திருநாவுக்கரசு வித்தியாலயம் உள்ளதால் நிராகரிக்கப்பட்டதாகவும் மாகாண கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.
6. வ/கருங்காலிக்குளம் அ.த.க. பாடசாலையில் தரம் 10 ஆரம்பித்தல் – 2016 அல் ஆரம்பிக்க அனுமதி வழங்கப்படுகின்றது.
7. வ/வீரபுரம் மாணிக்கவாசகர் வித்தியாலயம், ஆரம்பப் பிரிவு – 2016 இல் ஆரம்பிக்க அனுமதிக்கப்படுகின்றது.

8. வ/நெடுங்கேணி மகா வித்தியாலயம்,ஆரம்பப் பிரிவு – 2016 இல் ஆரம்பிக்கப்படும்.
9. யா/ஏழாலை மகா வித்தியாலயம் , ஆரம்பப் பிரிவு – 2016 இல் ஆரம்பிக்கப்படும்.
10. மன்/வெள்ளாங்குளம் வித்தியாலயத்தில் தரம் 10 ஆரம்பிக்க வேண்டிய அவசியம் உள்ளதாக கௌரவ மாகாணசபை உறுப்பினர் திரு.அ.பரஞ்சோதி அவர்கள் கேட்டுக் கொண்டார் – அறிக்கை கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டது.
11. யா/வறுத்தலைவிளான் பாடசாலை மீள ஆரம்பித்தல் – 2016 இல் ஆரம்பிக்க அனுமதிக்கப்படுகின்றது.
12. மன்/கொண்டச்சி அ.மு.க பாடசாலையில் க.பொ.த (கலைப்பிரிவு , வர்த்தக பிரிவு) ஆரம்பித்தல் – அறிக்கை கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டது.
13. வ/பரக்கும் மகா வித்தியாலயத்தில் தரம் 01 ஆரம்பித்தல் – அனுமதிக்கப்படுகின்றது.
14. வ/பெரிய கோமரசன்குளம் மகா வித்தியாலயத்தில் தரம் 01 ஆரம்பித்தல் – அனுமதிக்கப்படுகின்றது.

➢ **புதிய பாடசாலை ஆரம்பித்தல்**

- மன்னார் கணேசபுரம் இந்திய வீட்டுத் திட்டம் பகுதியில் ஆரம்பபிரிவு ஆரம்பித்தல் – வலயக் கல்வி பணிப்பாளரிடம் மாகாண கல்விப்பணிப்பாளர் அறிக்கை கோருவது என்று தீர்மாணிக்கப்பட்டது.
- யா/வண்ணார்பண்ணை முஸ்லிம் பாடசாலை மீள ஆரம்பிக்குமாறு கௌரவ மாகாண சபை உறுப்பினர் ஜனாப் .அஸ்மின் அவர்கள் கோரிக்கை ஒன்றை முன்வைத்தார்.
- புங்குடுதீவுப் பிரதேசத்திலுள்ள ஊரதீவு எனும் இடத்தில் 300 குடும்பங்கள் வசிப்பதனாலும் 25 மாணவர்கள் கடும் சிரமத்திற்கு மத்தியல் தூர தேச பாடசாலைக்கு சென்று வருவதனாலும் அங்கு மூடப்பட்டுள்ள திருநாவுக்கரசு வித்தியாலயத்தை உடன் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கௌரவ மாகாணசபை உறுப்பினர் திரு. கே.என்.கனகரத்தினம் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

➢ **பாடசாலை பெயர் மாற்றம் தொடர்பாக**

- யா/தாவடி இந்து தமிழக் கலவன் பாடசாலை தொடர்பில் கருத்துரைத்த மாகாண கல்விப் பணிப்பாளர் பாடசாலையில் க.பொ.த உயர்தரம் இல்லை எனவும் ஆராய்ந்து முடிவு எடுக்கப்பட வேண்டும் தெரிவித்தார்.
- யா/தியாகராஜா மத்திய மகா வித்தியாலயம் பெயர் மாற்றம் தொடர்பில் கருத்து தெரிவித்த மாகாணக் கல்விப் பணிப்பாளர் பெற்றோர், பழைய மாணவர், அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் இணைந்து நடாத்த இருந்த கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாகவும் பிறிதொரு தினத்தில் கூட்டம் நடைபெற்று முடிவு மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்.

கூடிய விரைவில் தீர்வு ஒன்றை ஏற்படுத்துமாறு கௌரவ மாகாண சபை உறுப்பினர் திரு கே.என்.கனகரத்தினம் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

- யா/சங்கானை சிவப்பரகாச வித்தியாலயத்திற்கு பெயர் மாற்றம் தொடர்பில் கௌரவ மாகாண சபை உறுப்பினர் திரு.ச.சுகிர்தன் அவர்கள் கோரிக்கை ஒன்றை முன் வைத்தார்.

➢ தனி ஒரு ஆசிரியரே கடமையாற்றும் பாடசாலைக்கு மேலதிக ஆசிரியர்களை நியமிக்குமாறு கோரிய கௌரவ மாகாண சபை உறுப்பினர் திரு அன்ரனி ஜெயநாதனுடைய கோரிக்கைக்கமைய விரைவில் ஆசிரியர்கள் கீழ்வரும் பாடசாலைகளுக்கு நியமனம் மேற்கொள்ளப்படும்.

  - ♦ மு/அம்பகாமம் அ.த.க.பாடசாலை – துணுக்காய் வலயம்
  - ♦ பெரிய மடு அம்பாள் வித்தியாலயம்

**விளையாட்டு தொடர்பாக**

➢ தேசிய கபடிப் போட்டியில் வவுனியா மாவட்ட இளைஞர் அணி சம்பியனானதற்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

➢ கபடிப் போட்டியில் மத்தியஸ்தர்கள் செயற்பாடு திருப்திகரமாக இருப்பதில்லை என வடமராட்சி சென் தோமஸ் அணி தெரிவித்துள்ளதாக கௌரவ மாகாண சபை உறுப்பினர் திரு.ச.சுகிர்தன் தெரிவித்தார்.

➢ விளையாட்டுத் திணைக்களத்தின் ஆளணியில் உள்ள Ground Boy நியமிக்க முடிவு செய்யப்பட்டது தொடர்பில் பதிலளித்த விளையாட்டுத்துறை பணிப்பாளர் புதிதாக ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

➢ அஞ்சலோட்டம் முதலமைச்சர் கிண்ணம் – யாழ் மாவட்டத்தில் நடாத்துதல் சனவரி 2016இல் நடாத்தப்படும்.

**கட்டடம் அமைத்தல்**

யா/பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலயத்தில் பழைமையான கட்டடம் ஒன்றை மாற்றி புதிய கட்டடம் அமைத்தல் தொடர்பாக கலந்துரையாடப்பட்டு பழைய கட்டடத்தின் முகப்பினை அப்படியே வைத்துக் கொண்டு புதிய மண்டபம் அமைப்பதாக தீர்மானிக்கப்பட்டது.

**கலாசாரம் தொடர்பானது**

- **பண்டாரவன்னியன் சிலை அமைப்பது தொடர்பாக**
  அரச அதிபரின் அனுமதி பெற்று மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

- **வடக்கு மாகாண கல்வி முறைமை மீளாய்வு, சிபாரிசுகள் அமுல்ப்படுத்தல்.**
  **(RIMP), (LMDMU)**
  சிறப்புற பணிகள் மேற்கொள்ளப்படுவதாக கௌரவ அமைச்சர் அவர்கள் தெரிவித்தார். பணிகளை பார்வையிட விரும்பும் கௌரவ உறுப்பினர்கள் யா/நல்லூர் ஆனந்த வித்தியாலய அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.

- **2015 ஆம் ஆண்டுக்கான TSEP, PSDG,CBG ஆகிய நிதி ஒதுக்கீடுகளின் மீளாய்வு**
  பிரதம பொறியியலாளர் அவர்கள் 60% ஆன வேலைத் திட்டங்கள் நிறைவு பெற்றுள்ளன என தெரிவித்தார்.

- **பட்டதாரி ஆசிரியர் நியமனம்**
  கூடிய விரைவில் நியமனம் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

- **புத்தளத்தில் இயங்கும் வட மாகாணப் பாடசாலைகள் பற்றியது**
  நடமாடும் சேவை நடாத்தப்பட்டது. வட மேல் மாகாண கல்வி அமைச்சின் செயலாளரிடம் மாகாண கல்விப்பணிப்பாளர்,வலயக்கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோருடனான கலந்துரையாடல் ஒன்றிற்கு ஏற்பாடு செய்து தருமாறு கேட்டுக் கொண்டுள்ளதாக செயலாளர் தெரிவித்தார்.

**வேறு விடயங்கள்**

- வவுனியா வடக்கு வலயத்தில் உள்ள, மாணவர் தொகை குறைந்த பாடசலைகளை ஒன்றிணைத்தல் தொடர்பாக ஆராயப்பட்டு பெற்றோருடன் கலந்துரையாடப்பட்டு முடிவு எட்டப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டது.
- முல்லைத்தீவு R.C பாடசாலையை பெண்கள் பாடசாலையாக மாற்றுதல் தொடர்பில் கௌரவ மாகாண சபை உறுப்பினர் அன்ரனி ஜெயநாதனுடைய கோரிக்கை தொடர்பில் 07.12.2015 அன்று கூட்டம் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டது.
- இரண்டாம் மொழி ஆசிரியர்களுடைய பற்றாக்குறை தீர்க்கப்பட வேண்டும் என கௌரவ மாகாண சபை உறுப்பினர் திரு. கே.சிவநேசன் அவர்கள் கேட்டுக் கொண்டார்.
- முல்லைத்தீவு மகா வித்தியாலயம், உடையார்கட்டு மகா வித்தியாலயம், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி ஆகியவற்றின் மகிந்தோதய ஆய்வு கூடம் உடன் திறக்கப்பட வேண்டும் என கௌரவ மாகாண சபை உறுப்பினர் அன்ரனி ஜெயநாதன் அவர்கள் கேட்டுக் கொண்டார்.
- அச்சுவேலி பாடசாலை காணியை உரியோரிடம் கையளிக்க உடன் நடவடிக்கை எடுக்குமாறு கௌரவ மாகாணசபை உறுப்பினர் திரு.அ.பரஞ்சோதி அவர்கள் கேட்டுக் கொண்டார்.
- யாழ் மத்தியிலுள்ள OLR பாடசாலைக்கு அருகிலுள்ள இராணுவ முகாமில் ஆபத்தை விளைவிக்க கூடிய ஆயுதங்கள் உள்ளதாகவும் அதனால் பாடசாலைக்கு பாரிய பாதிப்பு உள்ளதாகவும் கௌரவ மாகாணசபை உறுப்பினர் திரு. கே.என்.கனகரத்தினம் அவர்கள் கேட்டுக்கொண்டார்.
- வலயக் கல்விப் பணிப்பாளர் இடமாற்றம் தொடர்பில் கௌரவ மாகாணசபை உறுப்பினர் திரு.அ.பரஞ்சோதி அவர்களின் கோரிக்கை தொடர்பில் கலந்துரையாடப்பட்டு சகல வலயங்களிலுமுள்ள கல்விப் பணிப்பாளர்கள் 05 வருடத்திற்கு குறைந்த சேவைக்காலத்தை உடையவர்கள் எனவும் கௌரவ அமைச்சரினால் தெரிவிக்கப்பட்டது.
- மு/வெட்டு வாய்க்கால் பாடசாலை வளாகத்தினுள் இராணுவ முகாம் கட்டடம் தொடர்பில் ஆராயப்பட்டு பிரதேச செயலருடன் கலந்துரையாடுவதற்கு முடிவு எடுக்கப்பட்டது. அத்துடன் கணனி வள நிலையம் , ஆசிரியர் வள நிலைய கட்டடங்களை அமைப்பதற்கான காணிகளை மாவட்ட செயலரிடம் கோருவது எனவும் தீர்மாணிக்கப்பட்டது.
- யா/சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையிலான முரண்பாடு உடன் தீர்க்கப்படவேண்டும் என்ற கௌரவ மாகாணசபை உறுப்பினர் திரு.பா.கஜதீபன் அவர்களின் கோரிக்கை தொடர்பில் பதிலளித்த செயலாளர் விசாரணைகள் முடிவுற்றுள்ளதாகவும் விரைவில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்.
- கிளிநொச்சி மகா வித்தியாலத்தில் அதிபர் நியமனம் தொடர்பில் தெளிவின்மை உள்ளதாக இன்ரநெற் வலையமைப்புகளில் செய்தி வெளிவருவதாக கௌரவ மாகாணசபை உறுப்பினர் திரு.அ.பரஞ்சோதி அவர்களின் கோரிக்கைக்கு பாடசாலை அதிபர் நியமனம் சரியான முறையில் இடம்பெற்றுள்ளதாக கௌரவ அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

- வ/பெரிய கோமரசன்குளம் அதிபர் , ஆசிரியர் முரண்பாடு தொடர்பில் கௌரவ மாகாணசபை உறுப்பினர் திரு.ரி.லிங்கநாதன் அவர்களின் கோரிக்கைக்கு செயலாளர் அவர்கள் விசாரணை குழு நியமிக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக தெரிவித்தார்.
- வலயக் கல்விப் பணிப்பாளர் , அதிபர் நியாமனம் தொடர்பில் திரு.எஸ்.புஸ்பலிங்கம் – பிரதிப் பணிப்பாளர் (கல்வி) அவர்களின் கோரிக்கைக்கு கடந்த காலங்களில் இடம்பெற்ற முறையற்ற நியமனங்கள் படிப்படியாக சீர் செய்யப்பட்டு வருவதாகவும் தகுதியானவர்களுக்கு நியமனம் வழங்கப்படும் எனவும் கௌரவ அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.
- யா/யூனியன் கல்லூரியின் 200 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு பாடசாலையில் மேல் மாடித்தளம் அமைப்பதற்கு 20 மில்லியன் ரூபா கோரியுள்ளதனால் மத்திய அரசிடம் கோருவதற்கு முடிவு எடுக்கப்பட்டது.
- 2014 ஆம் ஆண்டு 09 பாடசாலைகளிற்கும் 27 கழகங்களிற்கும் நிதி வழங்கியருந்ததாகவும் அந் நிதி உரியவர்களை சென்றடைந்தமை தொடர்பில் கௌரவ மாகாணசபை உறுப்பினர் திரு.ரி.லிங்கநாதன் அவர்களின் வினாவிற்கு பிரதேச செயலகங்களினூடாகவே மேற்கொள்ளப்பட்டதனால் பிரதேச செயலகங்களில் தொடர்பு கொண்டு உரிய பதிலை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் கௌரவ அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.
  அவ் விடயம் தொடர்பில் இனிவரும் காலங்களில் கொள்வனவுகள் மாகாண கல்வித் திணைக்களத்தினூடாக மேற்கொள்ளப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும் என கௌரவ மாகாணசபை உறுப்பினர் திரு.எம.பி.நடராஜ் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

கௌரவ கல்வி அமைச்சர் அவர்களின் நன்றியுரையுடன் கூட்டம் பிற்பகல் 01.30 மணியளவில் இனிதே நிறைவு பெற்றது.

இ.இரவீந்திரன்
செயலாளர்.

இ. இரவீந்திரன்
செயலாளர்
கல்வி,பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை,
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
வட மாகாணம்